# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**STC.No.135/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கருப்பையா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் கொசவக்கோட்டையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி எனக்கு பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 21.09.2024 ம் தேதி என் பெரிய மகன் செந்திலுக்கும் எனக்கும் பிரச்சனை. அது சம்பந்தமாக கடந்த 21.09.2024 ம் தேதி மாலை 5 மணிக்கு கண்ணங்குடியில் உள்ள தர்மராஜ் டீக்கடையில் பேசிக் கொண்டிருக்கும்போது எதிரி முத்துமணி யாரைடா சொன்ன என்று சொல்லி தரக்குறைவாக கெட்ட வார்த்தைகளால் பேசி பின்னால் வைத்திருந்த களைக்கொட்டை எடுத்து என் நெற்றியில் வெட்டிவிட்டார். பின்பு என்னை தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு என் மகள் வசந்தி அழைத்து வந்தார். அங்கிருந்து என்னை

சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தேவகோட்டை தாலுகா போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என் மகன் என்ன விசேசம் வைத்திருந்தார் என்றால் அவருடைய மகள் வயதுக்கு வந்ததற்கு விசேசம் வைத்திருந்தார். அந்த விசேசத்திற்கு என்னிடம் சொல்லாததால் நான் அதில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அது குறித்துதான் நான் தர்மராஜ் டீ கடையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். யாருடன் பேசிக் கொண்டிந்தேன் என்றால் கத்தமங்களம் மாயாண்டி, தாதன்வயல் மாரியப்பன் ஆகியோர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது எதிரி யாரை பற்றி பேசுகிறாய் என்று வந்து என்னுடன் மல்லுக்கட்டினார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மல்லுக்கட்டிக் கொண்டோம் என்றால் சரிதான். எதிரி களைக்கொட்டை எங்கு வைத்திருந்தார் என்றால் முதுகுப்பின்னால் சட்டைக்குள் வைத்திருந்தார். அதனை எடுத்து என்னை வெட்டிவிட்டார். சம்பவம் நடக்கும்போது அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டார்களா என்றால், அவர் அடித்தவுடனே நான் கீழே விழுந்துவிட்டேன். நானும் என் மகள் வசந்தியும்தான் கடை பஜாருக்கு சென்றிருந்தோம். என் மகள் பொருட்கள் வாங்கிக்கொண்டிருக்கும்போது நான் டீ கடையில் பேசிக் கொண்டிருந்தேன். என்

மகளை நாரணமங்களத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். கண்ணங்குடிக்கும் நாரணமங்களத்திற்கும் சுமார் 7 கீலோ மீட்டர் இருக்கும். ரத்தம் பட்ட துணிமணிகளை போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் அப்போது எனக்கு நினைவு இல்லை. சிவகங்கை போலீசார் என்னிடம் வந்து கேட்கும்போது எனக்கு நினைவு இல்லை. தேவகோட்டை போலீசாரிடம் ரத்தம் பட்ட துணிகளை கொடுத்தேனா என்றால், அவர்கள் பார்த்து போட்டோ எடுத்துக் கொண்டார்கள். சம்பவம் குறித்த விபரங்களை நான் சிகிச்சையில் இருந்ததால் என் மகள் வசந்திதான் போலீசாரிடம் சொன்னார் என்றால் சரிதான். மேற்படி விபரங்கை எழுதிக் கொண்டு போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதன்பின்பு போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் , புகார் கொடுத்ததற்கு ரசீது வாங்க வந்தபோது விசாரித்தார்கள். சிகிச்சை முடிந்து எத்தனை நாட்கள் கழித்து ரசீது வாங்கபோனேன் என்றால், 10 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பிறகு வாங்கினேன், எத்தனை நாட்கள் என்று தெரியாது. எனக்கும் எதிரிக்கும் முன்பே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் ரூ.2000/- கடன் வாங்கியிருந்தேன் என்றும் அதை திரும்ப கொடுக்காததால் அதை பல முறை கேட்டு வந்தார் என்றால் சரியல்ல. எதிரியுடன் என்னுடைய தாய் தகப்பன் காலத்திலிருந்தே வருத்தம் உள்ளது. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சரிதான். எதிரி முதுகுக்குப் பின்னால் வைத்திருந்த களைக்கொட்டால் வெட்டிவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கண்ணங்குடியில் வயக்காட்டிற்கு செல்லும்போது தடுமாறி விழுந்து காயம்

ஏற்பட்டது என்றும் அந்த காயத்தை வைத்து பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.